Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வேலுமயிலுந் துணை.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று வெளிவரும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. } 1919ஆம் அக்டோபர்மீ சித்தார்த்தி புரட்டாசிமீ { மாதம் 2.

## கடவுள் வணக்கம்.

காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் கார மென்னுங்
கல்லைப்பு ளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத்தி ருத்தி மென்மேற்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித் தன்பு நீராகவே
பாய்ச்சிய து பயிராகு மட்டுமா மாயைவன்
பறவை யணுகாத வண்ணம்
கோராக நின்றவினை போகம்பு சித்துண்ட
நின்னன்பர் கூட்ட மெய்த
நினைவின்ப டிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பார மென்றும்
ஆராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரிய மயமே
அண்டபகி ரண்டமும டங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



## ஞானபோதகம்.

### ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸ தேவர் திருவாய்மொழி

### சர்வ சமய மார்க்கம்.

சமயபேதங்கள் யாவும், ஸர்வசக்தியுள்ள பகவானைப்போய் அடைவதற்காக, ஏற்பட்ட மார்க்கபேதங்களாம். காளி கட்டடத்திலுள்ள ஸ்ரீ காளிதேவியின் ஆலயத்துக்குச் செல்ல வெவ்வேறான பல்வகை வழிகளிருக்கின்றன. அவ்வாறே பகவானுடைய வீட்டுக்குச் செல்லும் வழிகளும் பலபலவேயாம். ஒவ்வொரு சமயமும் பகவானை நோக்கிச் செல்வதற்கான ஒவ்வொரு மார்க்கமேயன்றி வேறில்லை.

ஒரே தங்கத்தினால் வெவ்வேறு வடிவமும் பெயருமமைந்த பல்வகை நகைகளை செய்வதுபோல், ஒரே பகவானை வெவ்வேறான தேசங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாமரூபங்களால் உபாஸிக்கின்றார்கள். சிலர் அவனைத் தந்தையென்றும், சிலர் தாயென்றும், சிலர் அவனை நண்பனென்றும், சிலர் நாயகன் என்றும், சிலர் அவனைத் தங்கள் ஹிருதய கமலத்தில் விளங்கும் மாசிலாமணி என்றும், சிலர் ஜகந்மோகன பாலகோபால னென்றும், இவ்வாறு பற்பல பாவனைகளாலும், பிரகாரங்களாலும், உபாஸித்தாலும், இப்பலவகைப் பிரகாரங்களாலும், உபாஸிக்கப் படுகிற பகவான் ஒருவரே யாவர்.

ஒரு குடும்பத்திலுள்ள நாட்டுப்பெண் தனது, மாமனார் மாமியார், முதலானவர்க ளிடத்தில், அன்போடும் வணக்கத்தோடும். பிரவர்த்திப்பதுடன், தன் கணவனை மேல்சொல்லிய எல்லாரிலும் அதிக அன்புடன் நேசிப்பதுபோல், நீ உன் இஷ்டதேவதையினிடத்தில் ஸ்திரமான பக்திவைப்பதுடன் இதர தேவதைகளை இகழாமல் இருப்பது மன்றி அவர்களை எல்லாம் போற்றவும் வேண்டும்.



எங்கே மற்றவர்கள் ஸாஷ்டாங்கமாய் விழுகின்றார்களோ அங்கே நீயும் பணிந்து பஜனம் செய்வாய். ஏனெனில் அத்தனை பக்தர்கள் ஒன்று சேர்ந்து பரனைப் போற்றும் ஸ்தானத்தில் அபார கருணாநிதியான பகவான் அவசியம் வீற்றிருப்பார்.

சர்க்கரை என்னும் ஒரே பதார்த்தத்தினின்றும் பறவை, விலங்குமுதலிய பலவகை யுருவங்களை அமைப்பதுபோல் அருளமுதம் அளிக்கும். அத்விதீயப் பரம பொருளாகிய ஜகதம்பிகையைப் பற்பல தேசங்களிலும் காலங்களிலும் பலவகை நாமரூபங்களால் பக்த கோடிகள் ஆராதிக்கின்றனர்.

பச்சோந்தியின் நிறத்தைப்பற்றி இருவர் வழிப்போக்கர் உக்கிரமாய் வழக்காடிக் கொண்டிருந்தனர் அவர்களுக்குள் ஒருவன் அதோ அந்த மரத்திலுள்ள பச்சோந்தி அழகிய செந்நிறமாயிருக்கிறது பார் என, மற்றவர் இல்லை இல்லை நீ கூறுவது பிசகு பச்சோந்தியின் நிறம் செந்நிறமன்று நீலநிறம் என்றான். இவ்வாறு இவர்கள் வழக்காடிக் கொண்டே யாதொரு தீர்மானத்துக்கு வாராமல் ஸதா அந்த மரத்தடியிலேயே இருந்துகொண்டு பச்சோந்தியின் நிறத்தைக் கவனித்து வந்த ஒருவனிடம் சென்று ஐயா அந்த மரத்திலுள்ள பச்சோந்தி செந்நிறமான தன்றோ? என்றொருவர் வினவ மரத்தடியிலுள்ள மனிதன் "ஆம்" என விடையளித்தான் என்ன ஐயா, அது நீலநிற மாயிற்றே? செந்நிறமென்று எவ்விதம் செப்பினீர்? என்று மற்றவன் கேட்க, அதற்கும். ஆமாம், என்று மறுபடியும் அம்மனிதன் உரைத்தான் 'பச்சோந்தியின் நிறம். ஸதா மாறிக்கொண்டே இருக்குந் தன்மை யாதென்று அறிந்தவனானபடியால், பரஸ்பரம் விரோதமான அவ்விருவர் வினாக்களுக்கும் அவன் ஆம் என ஒரேவிடை யளித்தான்.

அதுபோலவே ஸச்சிதானந்தப் பரம்பொருளும் அநந்தரூப வசிஷ்டமானது. அவ்வுருவங்களுள் ஒன்றை மாத்திரம் கண்டவன் அதுதான் கடவுளினுருவம் என்றுணர்கின்றான். ஆனால் அவரது அநந்தகோடி லீலா விபூதிகளையுங் கண்டு களித்த ஞானி ஒருவனே. இவ் வநந்தகோடி ரூபங்களெல்லாம் அவ் வநந்த மூர்த்தியின் விபூதி

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



கள் என்றுகூற முடியும். கடவுள் ஸகஸமாயும், நிஷ்காமாயும் விளங்குகின்றார். அவரது மஹிமாரூபங்கள் அநந்தம் அவற்றை முற்றும் கண்டவர் ஒருவருமில்லை.

அக்கினிக்கு பிரத்தியேகமான உருவமொன் றில்லாமற் போயினும், கட்டைகளில் பற்றி எரியும்பொழுது, அதற்குச் சில உருவங்கள் அமைகின்றன. ஆகவே உருவமில்லா அக்கியானது உருவத்துடன்கூடிய தாகின்றது. அவ்வாறே உருவமற்ற கடவுளும் சில சமயங்களில் திவ்ய மங்களத்திரு மேனிகளுடன் விளங்குகின்றார்.

மணியின் ஓசை காதில் பட்டுக்கொண் டிருக்கிறவரையில், ரூபப்பிர தேசத்தில் இருக்கின்றது அது காதில் படுவது நின்று விடும்பொழுது, ரூபாஹிதமாகின்றது, அதுபோலவே கடவுளும் ரூபியாயும், அரூபியாயும், விளங்குகின்றார்.

---

வந்தனோப சாரமும்

# நமது பத்திரிகையும்.

சர்வஜீவ தயாபர வஸ்துவான அருட்பெருங் கருணையால், என்னரும் இளமைப் பருவத்தில், பொன்னினுஞ் சிறந்த நந்தமிழின் முதலெழுத்தை யோதி, முறையே கல்விப்பாலை யூட்டுவித்த, இறைவனருளைக் கருத்தில் நிறுத்தி, ஆதியில் பத்திரிகையில் வியாசங்களெழுதவும். கவிகள் பாடவும், அடியெடுத்துதவிய, என்னாசான் உடுமலை முத்துசாமி கவிராயரவர்களுக்கும்,

பத்திரிகை நடத்தும் உணர்ச்சி யூட்டிய, ஸ்ரீமான், ஸ்ரீ லோகமாதா பத்திராதிப ரவர்களுக்கும், அவ்வுணர்ச்சி மேலிட்டு வளர்ச்சி பெறச்செய்த இலங்கை நாடார்குல நண்பர்களுக்கும், நாடார்ஜன சமூகராஜ பக்தியைப் பாராட்டி, நமது மித்திரனை நடத்திக்கொள்ளும்படி உதவிய ராமநாதபுரம் கலெக்டர் துரையவர்களுக்கும், உதவிக்கோ ருதவிசெய்த கனம் ஜெபரிச் துரையவர்களுக்கும்,



எமக்கோர் பேருபகாரம் புரிந்த நாடார் மகாஜனசங்கம் முக்கிய அங்கத்தினர்கட்கும், போஷகராக முன்வந்து 50-ரூபாய் கொடுத்துதவிய, எனது ஆப்த நண்பரும், பாலக்காடு முனிஸிபல் கௌன்சிலருமான, கனம் பொன்னப்ப நாடா ரவர்கட்கும், உலக க்ஷேமத்தைக்கருதி பாடுபடும் பத்திரிகா சிரியர்கட்கும், மேரிராணி ஜார்ஜ்மன்ன ரவர்கட்கும், மித்திரனை யாதரிக்கும் உத்தமர்கட்கும், மனதன்பான சகல நண்பர்கட்கும், என் மனப்பூரணமான வந்தனம் வந்தனம்.

## காரணம்.

ஒரு ஜாண் வயிற்றுக் கிரைதேடி யுண்டு ஜீவிக்க எமக்கு வேறுவகை யிருந்தும், பத்திரிகைத் தொழிலை யேற்று முன்வந்த காரணம் என்னவென்றால், வெகுநாளாக நமக்கென்று ஒரு தனிப் பத்திரிகை யில்லாதது, பெருங்குறை என்று பலரும் பேசியும் எழுதியும் வந்தார்கள். சென்றவருடம் மதுரையில் கூடிய கான்பரென்ஸில், கூட்டுறவினால் ஒருநிதி சேர்த்து, அதிலிருந்து ஒரு பத்திரிகை நடத்துகிறதென்று, நானும் சென்னை, ம-ள-ள-ஸ்ரீ, கோதண்டராம பாண்டிய நாடாரவர்களும், கொண்டு வந்த தீர்மானத்தை எல்லோரும் ஆதரித்தார்கள். ஆனால் அதன்படி காரியம் ஒன்றும் நடக்கவில்லை. அச்சமயம் தூத்துக்குடியில் மிஸ்டர் ராமலிங்க நாடார் "ஞானோதயம்" என்ற ஒரு மாதாந்தப் பத்திரிகை ஆரம்பித்தார். அது பெரும்பாலும் நாடார்களின் அபிவிர்த்தியைக் கருதியே வெளிவந்தது. அதையாவது கைதூக்கி விடலாமென்று பலரும் முயற்சி செய்தார்கள். நாமும் அதற்கு விஷயதானம் புரிந்து வேண்டிய உதவிசெய்து வந்தோம். நமது துரதிஷ்ட வசத்தால் அவர் திடீரென மரணமாய்விட்டார். ஆனாலும் அவர் பத்திரிகையின் பெயருக்கேற்ப, நமது ஜனங்களுக்கு பத்திரிகையின் பேரில் ஞானம் அதிகமாய் உதயமாய்க் கொண்டதென்றே சொல்லலாம். அப்பத்திரிகையை வாசித்து வந்த நண்பர்கள் பலர், என்னை ஒரு பத்திரிகையை நடத்தும்படித் தூண்டினார்கள். முக்கியமாய் இலங்கை வாசிகள்தான் அதிகமாய் வற்புறுத்தினார்கள். அதுசமயம் ஸ்ரீ லோகமாதா பத்திராதிபர், கனம். சிவராமலிங்கம் பிள்ளை யவர்கள், தைரியங்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



கூறினர்கள். அப்போதும் எமக்கிருக்கும் வேலையும் எம் நிலைமையும் சீர்தூக்கிப் பார்த்தால் அதைரியமே கொண்டது.

மேலும் தற்சமயம் நமக்கு ஒரு தனிப்பத்திரிகை யில்லாதப் பெருங்குறையையும், பத்திரிகையின் பேரில் ஜனங்களுக் குள்ளிருக்கும் ஆவலையும் உத்தேசித்து ஆறுலக்ஷத்துக்கு மேற்பட்ட நமது நாடார் ஜனங்களும், நாடார் மகாஜனங்களிடத்தில் அபிமானமுள்ள பல கனவான்களுடைய பேருதவியை நம்பிய தைரியமேலீட்டால், அஞ்சாது பத்திரிகை ஆரம்பிக்க முன்வந்தோம்.

## திருநாமம்.

நாடார் மகாஜனங்களுடைய நன்மையையே முக்கியமாய்க் கருதி முன்வந்த காரணத்தால், இதற்கு "நாடார்குல மித்திரன்" என்ற நாமதேயமே பொருத்த மென்று, பலரும் யோசனை சொன்னதற் கிணங்க அப்பெயரையே சூட்டினோம்.

## விஷயம்.

இதில் எழுதிவரும் விஷயங்க ளெல்லாம், நமது நாடார் மகாஜன சங்கத்தின் நோக்கத்தை பூர்த்திசெய்யக் கூடியதாகவே யிருக்கும். விஷயதானம் புரியும் நேயர்களும் அவ்வண்ணமே செய்து வருவார்களென்று நம்புகின்றோம்.

## அபிவிருத்தி.

நமது மித்திரன் அபிவிர்த்தியாக வேண்டுமானால், பலரும் தத்தம்மா லியன்ற அளவு உதவிசெய்ய வேண்டும். போஷகர்களாக வும், ஜீவிய சந்தாதாரர்களாகவும், பிரபுக்களா யிருப்பவர்கள் முன் வரவேண்டும். மற்றவர்கள் ஒவ்வொருவரும். சந்தாதாரராகவும் சேரவேண்டும். மொத்தம் 1000, சந்தாதாரர் சேர்ந்துவிட்டால், இப் பத்திரிகையை வெகு ஊக்கமாய் நடத்துவோம். 1000-க்கு மேற் பட்டுவிட்டால் அடுத்த வருடத்தில் வாரப் பத்திரிகையாக மாற்றி விடுவோம். எல்லோருடைய அபிமானமும் பூரணமா யடைந்து விட்டதானால், தினசரிப் பத்திரிகைக் குரிய சகல ஏற்பாடுகளும்



செய்து முடிக்கத் தயாரா யிருக்கின்றோம். ஆகையால் ஒவ்வொரு அபிமானிகளும் சந்தாச்சேர்த்து அனுப்பிவைக்கக் கோருகின்றோம். தமது பூரணமான மனதை மித்திரன்மீது சகலரும் வைக்கும் பட்சத்தில் 1000, அல்லது 6000, சந்தா யேன் சேர்க்க முடியாது

காயம் அனித்தியம், முடிசார்ந்த மன்னரும், மற்றுமுள்ளோரு முடிவிலொரு பிடி சாம்பலாவது நிச்சயம், காலமோ வெகு வேகமா யோடுகின்றது. நமக்காகக் காலம் காத்து நிற்காது நாடார்குல கனவான்களே! நமது ஜனசமூக முன்னேற்றமே தன்னேற்றமென்ற உணர்ச்சிகொண்டு, ஒவ்வொருவரும் நாளைச் செய்வோ மென்று காலங் கடத்தாமல், சாலச்சிறந்த நமது மித்திரனை ஆதரிக்க முன்வாருங்கள்.

பத்திராதிபர்.

---

# நாடார் மகாஜன சங்கம்.

## 5-வது கான்பரென்ஸ்.

### விருதுபட்டி.

### (18—7—1919.)

இக்கான்பரன்ஸ் ஸ்ரீமான், ராவ்பகதூர் த. இரத்தினசாமி நாடாரவர்கள், இருதயத்தி லுற்பவித்து, பிறையாற்றில் பிறந்து சென்னையில் தவழ்ந்து, மதுரையம் பதியில் நடந்து விளையாடி, 5-வது வயதில் விருதுபட்டியில் வந்து வித்தைகற்க ஆரம்பிக்க தென்றே விளம்பலாம்.

நாடார் மகாஜன சங்கத்திளங் குமரன் வித்தியாப் பியாசஞ் செய்து கொள்வதற்கிணங்க கான்பரன்ஸ் கூடுவதாகிய விருதைமா நகரத்தின் இயற்கைவாய்ந்த சிறப்பைப் பார்க்கிலும் மூன்று நாளாக தேவலோகம்போல் விளங்காநின்றது. அண்டத்தை விளாவிய மேடைகளெங்கும் பிரிட்டிஷ் கொடிகள் நற்குறிசனை வீசிக்கொண்டும்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



தருக்கள்தோறும் மகா தோரணங்களும், வளைவுகளும், பந்தல்க ளும் வெகு சிங்காரமா யிருந்தது. வந்தவர்கள் கூட்டமும், வாலிபர்க ளின் கூட்டமும், வாலண்டியர்கள் கிரேஷ்டமும், பார்க்கப் பரமானந்தமா யிருந்தது.

கான்பரன்ஸ் பிரசிடெண்ட் கனம் திவான்பகதூர், பி. கோபா லாச்சாரியா ரவர்கள் C. I. E. பிரஸிடெண்ட் கனம் பொன்னுசாமி நாடாரவர்கள், வைஸ்பிரஸிடெண்ட் க. குருசாகு நாடாரவர்கள் ஆகிய இம் மூன்று மூர்த்திகளையும், வரவேற்கும் போதுள்ள ஜனக் கூட்டத்திற் கோரளவுண்டோ? ஆதிசேஷனுந் தோள்மாற்றி யிருப் பானென்றே சொல்லலாம். கான்பரன்ஸ் நடந்த மூன்று நாட்களும் விருதுபட்டி பிரபலக் கனவான்க ளடங்கிய உபசாரணைக் கமிட்டி மெம்பர்கள், எடுத்துக்கொண்ட அபார வேலைகள் பிரமிக்கும்படியா யிருந்தது எல்லோருக்கு முன் மாதிரியாக அவர்கள் செய்து கொண்ட வேலையின் அருமை நேரில் பார்த்தவர்களுக்கே நன்கு தெரியும். மற்ற நடவடிக்கைக ளெல்லாம் தினசரிப் பத்திரிகைகளில் உடனுக்குடன் வெளிவந் திருப்பதாலும், எவ்வல்லவர்க ளானாலும், இதற்குமேல் எதுவுஞ் சொல்ல ஏலாதென்று அஞ்சும் வண்ணம் உபசாரணைக் கமிட்டி சேர்மென் ஸ்ரீமான், சு. ப. பொ. சண்முக சுந்தர நாடாரவர்கள் வரவேற்புப் பிரசங்கத்தில் விரிவாய்ப்பேசி யிருப்பதாலும், நாம் அதிகமா யொன்றும் சொல்வதற்கில்லை. அதன் பிரதிகள் ஒவ்வொருவரிடமும் அவசிய மிருக்கவேண்டும்.

முதல் நாள் சபைத்தலைமை வகித்த கனம் இராஜகோபா லாச் சாரியாரவர்கள், திருவாக்கை எதிர்பார்த்து, நின்ற ஜனங்கள் ஏமாற் றமடையா வண்ணம் அவர்களுடைய பிரசங்கம், வெகு விரிவாயில் லாமற் போனாலும், சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல், என்ற முறையில் அவர்கள் பிரசங்கம் அர்த்த புஷ்டியுள்ளதாகவும் அற்பு தமாய் பற்பல விஷயங்களை ஆனந்த கருத்தோடு வெகு உருக்கமாய்ப் பேசி முடித்த பெருமையும், அவர்கள் பத்தினி சகிதம் நம் மத்தியில் வீற்றிருந்த அருமையும் என்று மறந்துவிட மாட்டோம்.





## குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது நாளில், நாம் என்றைக்கும் நினைப்பில் வைத் துக் கொள்ளவேண்டிய விசேஷ சம்பவம் ஒன்று நடந்தது. அதாவது ஐரோப்பாவில் நடந்த மகாகோரமான யுத்தத்தில் பிரிட்டிஷ் நேசராச் சியங்களுடன் ஜெயித்த கொண்டாட்டம் நமது கான்பரன்ஸ் கூடுஞ் சமயம் வாய்த்ததேயாம். பிரிட்டிஷ் நேசராச்சியங்க ளெல்லாம் தத்தம் பங்குவீதம் பலத்தை உபயோகித்து ஜெயித்திருந்தும் சமாதானம் பிரான்ஸ் தேசத்திலே வைத்துப் பேசி முடித்துக் கொண்டாட நேர்ந்த காரணம் யாது? இச் சண்டையில் மற்றவர் களைப் பார்க்கிலும் பிரான்ஸ் பணத்தையும், பலத்தையும் ஜனத்தை யும் முயற்சியையும் அதிகமாய்ச் செலவு செய்து, ஆதிமுதல் அந்தம் வரை சொந்தநாடு குந்தக மடைவதையுங் கவனியாமல் தம்முடல் பொருளாவி மூன்றையும் தத்தம் பண்ணியபடியால் அப்பெருமை யதற்கேற்பட்டது.

அதுபோல் விருதுபட்டி நாடார்கள் தங்கள் சலியா வுழைப்பி னாலும் படிப்பினாலும் நாகரீக மேம்பாடுபெற்று, இக் கான்பரன்சுக்கு ஆதிமுதல் அந்தம் வரையும் அவர்கள் வெகுபாடுபட்டு முன் னின்ற கர்த்தாக்களாய் விளங்கியமையாலும், பணத்தையும் பலத் தையும், மனத்தையும், அதிகமாய்ச் செலவுசெய்து பிரயாசைப் பட்டமையாலும், அச்சமாதானக் கொண்டாட்டம் நமக்கு நடு நாய கமாய் விளங்கும் விருதுபட்டியில் கூடிய கான்பரன்ஸ் மேடையில் கொண்டாடும்படி நேர்ந்தது. இப் பெருமையை எல்லோரும் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். எல்லோரிடமும் டைரிபுக் இராதபடி யால் நமது மித்திரனைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளும்படிக் கூறுவோம்.

யானைமீது ஜார்ஜ் மன்னர் திருவுருவப் படத்தை அலங்கரித்து ஊர்வலம் வந்த காட்சியானது அருச்சுனன் ராக்ஷதர்களை வென்று தேவர் துயர் தீர்த்து தேவலோகத்தில் வெள்ளையானையின் மீது பவனி வருந் தன்மையென்றே புலவர்கள் புகல்வார்கள்.

மூன்றுவது நாள், அனேக தீர்மானங்கள் நிறைவேறி வந்த
ஞெபசார வாழ்த்துக்களுடன் மங்களானந்தமாய் முடிவுற்றது.
பொதுவாக இக் கான்பரன்ஸ் ஜனங்களுக்குள் மனோவெழுச்சியை
யும் நல்ல படிப்பினையும் கற்பித்திருக்கின்றன. இதில் செய்த தீர்
மானங்களின்படி நடத்திக் காட்டுவதற்கு ஆங்காங்குள்ள பொது
ஜனாபிமானிகள் முயற்சியும் கிளர்ச்சியும் பலமாய்ச் செய்யவேண்டும்.

## நன்கொடை.

நமது சங்கத்திற்குப் போதுமான பணம் அவசியம் வேண்டு
மென்றும் அதற்கு கனவான்களால் நன்கொடை யெழுதாமல் முடி
யாதென்றும் பல வருஷங்களில் பேசப்பட்டும் அப்பேச்சு சபைக்கு
வாராமலே போய்விட்டது. இவ் வருடத்திலோ கனம், பிரஸிடென்
டவர்கள் நன்கொடை யென்று யெழுந்து வாய்திறக்குமுன் பக்கத்தி
லிருந்த பிரபு கட்டாயப்படுத்தக் கூடாதென்றார். கனம், பிரஸி
டெண்டவர்களும் அப்படியே இஷ்டமானால் கொடுக்கலாம், கஷ்ட
மானால் கொடா திருக்கலாம் என்று சொல்லி யமர்ந்தார்கள். கொஞ்
சநேரம் சபை சலனமற் றிருந்தது. வேறு பேச்சுகள் ஆரம்பமாய்
விட்டது. பின்னால் கமுதியில் வசிக்கும் திருச்சுளி, கனம், பெ சி,
அல்லிமுத்து நாடாரவர்கள், பத்து ரூபாய் நன்கொடை கொடுத்
தார்கள். கரகோஷம் செவிடுபடும்படி யானது, இதைப்பார்த்த மகாப்
பிரபுக்கள் முகம் வெட்கித் தலைகுனியும் அறிகுறிகள் கொஞ்சமாவது
காணப்படவில்லை. நிகழ்காலஞ் சென்று வருங்கால மறிந்து பெருங்
கொடை கொடுக்கும் உதாரகுணங்களே அவர்கள் முகங்களில்
பொலிவுற்றிருந்தன.

## கைமேற்பலன்.

விருதுபட்டியில் வெகு நாளாக தலைவர்கள் அற்பக் காரணங்
களினால் சமாதானக் குறைவுபட்டு பொதுக் காரியங்கள் கொஞ்சம்
சீர்கேடாய்க் கொண்டிருந்தது. நமது கான்பரன்ஸ் கூடிய விசேஷத்
தால் வந்திருந்த பல கனகனவான்கள், கனம் பிரஸிடெண்ட் டவர்
களைத் தலைமையாய்க் கொண்ட ஒரு கமிட்டியமைத்து சுமார் பத்து
நாள் வரையுமிருந்து, ஒவ்வொருவரையும் விசாரித்து அனேகமாய்



சமாதானம் பண்ணிவைத் திருக்கிறார்கள். ஆனாலும் இன்னும்
கொஞ்சம் பாக்கியிருப்பதாயும் தெரிகிறது, அதுவும் சீக்கிரம்
முடிந்து, மற்ற யிடங்களிலுமுள்ள விகற்பங்களும் தொலையும்படி
யாக நமது சங்கத்தில் ஒரு பஞ்சாயத்து நியமித்து கோர்ட்டு
களில் அனியாயமாய்ப் பணங்களைச் செலவு செய்து நமது அருமை
யும் பெருமையும் அழிந்திடாவண்ணம் காப்பாற்று வார்களென்று
நம்புகின்றோம்.

## அடுத்தவருடம்.

நமது கான்பரன்ஸ் அடுத்த வருடம் தூத்துக்குடியில் கூடும்
படி கனம், மா. வயி. காசிச்சாமி நாடாரவர்களும், கனம், ப. சொ,
ச. ஆறுமுகசாமி நாடாரவர்களும், அழைத்திருக்கிறார்கள். நம்மில்
எல்லாவூர்க் காரர்களும் வர்த்தகப் பிரபுக்கள் பலரும் அங்கு வசிப்
பதால் கான்பரன்ஸ் வெகு ஆடம்பரத்துடன் நடைபெறுமென்று
நம்புகின்றோம். இப்போதே கான்பரன்ஸுக்கு ஆகவேண்டிய காரி
யங்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் சிந்தனை யுண்டாய்க் கொண்
டிருப்பதாய்த் தெரிகிறது. இவ்வருஷத்தைப் பார்க்கிலும் அதிகமான
ஜனங்கள் வந்து கூடுவார்கள் என்ற பிரஸ்தாபம் வெங்கும் உண்
டாய்விட்டன. தூத்துக்குடி சேர்த்தியாய் நடத்தி வைத்தபின், சாத்
தூர், சிவகாசி, பார்த்திருக்காது. கான்பரன்ஸ் சென்னையில் கூடிய
பின் சில வருஷங் கூடாமல் நின்றகாலம், வருட மொருமுறை
ஒவ்வொரு முக்கியமான யிடங்கள்தோறும், டிக்கெட் வைத்துக்
கூட்டிவைக்க வேணுமென்ற அறிவாளிகள் கூறிய ஜோஸ்யம்
பலித்து வருவதற்காக, அவர்களுக்கு பன்முறை நமது வந்தனத்தை,
உள்ளன்போடு செலுத்துவோமாக.

---

## இந்தியத்துருப்பு.

சமீபத்தில் சமாதானமாகிய ஐரோப்பா மஹாயுத்தத்திற்கு இந்
தியா 1401450 போர்வீரர்களையும், குடியேற்ற நாடுகள் எல்லாம்
சேர்ந்து, 1425864 போர் வீரர்களையும், உதவிசெய் திருக்கின்றன,
குடியேற்ற நாட்டு வீரர்களில் கருப்புமனிதர் 122831 பேர்களாவர்.
ஆக 15 லக்ஷம் இந்தியத்துருப்புகள் உலக நாகரீகத்தின் அபிவிருத்திக்
காக, சண்டை செய்திருக்கின்றது.

மூன்றுவது நாள், அனேக தீர்மானங்கள் நிறைவேறி வந்த ஞேபசார வாழ்த்துக்களுடன் மங்களானந்தமாய் முடிவுற்றது. பொதுவாக இக் கான்பரன்ஸ் ஜனங்களுக்குள் மனோவெழுச்சியையும் நல்ல படிப்பினையும் கற்பித்திருக்கின்றன. இதில் செய்த தீர்மானங்களின்படி நடத்திக் காட்டுவதற்கு ஆங்காங்குள்ள பொது ஜனாபிமானிகள் முயற்சியும் கிளர்ச்சியும் பலமாய்ச் செய்யவேண்டும்.

## நன்கொடை.

நமது சங்கத்திற்குப் போதுமான பணம் அவசியம் வேண்டுமென்றும் அதற்கு கனவான்களால் நன்கொடை யெழுதாமல் முடியாதென்றும் பல வருஷங்களில் பேசப்பட்டும் அப்பேச்சு சபைக்கு வாராமலே போய்விட்டது. இவ் வருடத்திலோ கனம், பிரஸிடெண்டவர்கள் நன்கொடை யென்று யெழுந்து வாய்திறக்குமுன் பக்கத்திலிருந்த பிரபு கட்டாயப்படுத்தக் கூடாதென்றார். கனம், பிரஸிடெண்டவர்களும் அப்படியே இஷ்டமானல் கொடுக்கலாம், கஷ்டமானல் கொடா திருக்கலாம் என்று சொல்லி யமர்ந்தார்கள். கொஞ்சநேரம் சபை சலனமற் றிருந்தது. வேறு பேச்சுகள் ஆரம்பமாய் விட்டது. பின்னால் சமுகியில் வசிக்கும் திருச்சுளி, கனம், பெ சி. அல்லிமுத்து நாடாரவர்கள், பத்து ரூபாய் நன்கொடை கொடுத்தார்கள். கரகோஷம் செவிடுபடும்படி யானது, இதைப்பார்த்த மகாப்பிரபுக்கள் முகம் வெட்கித் தலைகுனியும் அறிகுறிகள் கொஞ்சமாவது காணப்படவில்லை. நிகழ்காலஞ் சென்று வருங்கால மறிந்து பெருங் கொடை கொடுக்கும் உதாரகுணங்களே அவர்கள் முகங்களில் பொலிவுற்றிருந்தன.

## கைமேற்பலன்.

விருதுபட்டியில் வெகு நாளாக தலைவர்கள் அற்பக் காரணங்களினால் சமாதானக் குறைவுபட்டு பொதுக் காரியங்கள் கொஞ்சம் சீர்கேடாய்க் கொண்டிருந்தது. நமது கான்பரன்ஸ் கூடிய விசேஷத்தால் வந்திருந்த பல கனதனவான்கள், கனம் பிரசிடெண்ட் டவர்களைத் தலைமையாய்க் கொண்ட ஒரு கமிட்டியமைத்து சுமார் பத்து நாள் வரையிருந்து, ஒவ்வொருவரையும் விசாரித்து அனேகமாய்



சமாதானம் பண்ணிவைத் திருக்கிறார்கள். ஆனாலும் இன்னும் கொஞ்சம் பாக்கியிருப்பதாயும் தெரிகிறது, அதுவும் சீக்கிரம் முடிந்து, மற்ற யிடங்களிலுமுள்ள விகற்பங்களும் தொலையும்படியாக நமது சங்கத்தில் ஒரு பஞ்சாயத்து நியமித்து கோர்ட்டுகளில் அனியாயமாய்ப் பணங்களைச் செலவு செய்து நமது அருமையும் பெருமையும் அழிக்கிடாவண்ணம் காற்பாற்று வார்களென்று நம்புகின்றோம்.

## அடுத்தவருடம்.

நமது கான்பரன்ஸ் அடுத்த வருடம் தூத்துக்குடியில் கூடும்படி கனம், மா. வயி. காசிச்சாமி நாடாரவர்களும், கனம், ப. கொ. ச. ஆறுமுகசாமி நாடாரவர்களும், அழைத்திருக்கிறார்கள். நம்மில் எல்லாவூர்க் காரர்களும் வர்த்தகப் பிரபுக்கள் பலரும் அங்கு வசிப்பதால் கான்பரன்ஸ் வெகு ஆடம்பரத்துடன் நடைபெறுமென்று நம்புகின்றோம். இப்போதே கான்பரன்ஸுக்கு ஆகவேண்டிய காரியங்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் சிந்தனை யுண்டாய்க் கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. இவ்வருஷத்தைப் பார்க்கிலும் அதிகமான ஜனங்கள் வந்து கூடுவார்கள் என்ற பிரஸ்தாபம் எங்கும் உண்டாய்விட்டன. தூத்துக்குடி சேர்க்கியாய் நடத்தி வைத்தபின், சாத்தூர், சிவகாசி, பார்த்திருக்காது. கான்பரன்ஸ் சென்னையில் கூடிய பின் சில வருஷங் கூடாமல் நின்றகாலம், வருட மொருமுறை ஒவ்வொரு முக்கியமான யிடங்கள்தோறும், டிக்கெட் வைத்துக் கூட்டிவைக்க வேணுமென்று அறிவாளிகள் கூறிய ஜோஸ்யம் பலித்து வருவதற்காக, அவர்களுக்கு பன்முறை நமது வந்தனத்தை உள்ளன்போடு செலுத்துவோமாக.

---

## இந்தியத்துருப்பு.

சமீபத்தில் சமாதானமாகிய ஐரோப்பா மஹாயுத்தத்திற்கு இந்தியா 1401450 போர்வீரர்களையும், குடியேற்ற நாடுகள் எல்லாம் சேர்ந்து, 1425864 போர் வீரர்களையும், உதவிசெய் திருக்கின்றன. குடியேற்ற நாட்டு வீரர்களில் கருப்புமனிதர் 122831 பேர்களாவர். ஆக 15 லக்ஷம் இந்தியத்துருப்புகள் உலக நாகரீகத்தின் அபிவிருத்திக்காக, சண்டை செய்திருக்கின்றது.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



# நாடார் மகாஜனசங்கம்

## கௌன்ஸில் மீட்டிங்.

மதுரை மேலப் பேட்டையில் ஷை மீட்டிங். கனம் வக்கில் A. பொன்னையா நாடாரவர்கள், பி. ஏ. அக்கிராசனத்தின் கீழ் 17-8-19. மாலை 3-மணிக்குக் கூடியது. உள்ளூராரும், வெளியூர்களி விருந்தும், சுமார் 30, மெம்பர்கள் பிரசன்னமா யிருந்தார்கள். மீட்டிங் சரியாய் 3½-மணிக்கு ஆரம்பித்து, 9-மணி வரையும் நடைபெற்றது. நமது மேன்மைதங்கிய வைஸ்ராய் லார்டு ஜேம்ஸ்போர்டு அவர்கள், சென்னைக்கு வரும்போது நாடார் மகாஜன சங்கத்தினர்கள் அங்கு சென்று நம்முடைய குறைகளைச் சொல்லிக் கொள்வதற்குரிய, விஷயத்தை முன்னக்கூடியே சென்னை கவர்ன ரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டிய மாதிரியை, கனம், பி. பழனிவேல் நாடாரவர்கள், பி. ஏ, A. பொன்னைய நாடாரவர்கள், பி. ஏ. இவர்கள் எழுதித் தயார்செய்ததை சபையினிடம் படிப்பிக்கப்பட்டது. அதில் சில விஷயங்களைப்பற்றி வாதம் 3-மணிநேரம் பலமாய் நடந்தது. கடைசியாக மெசாரிடி அவர்கள் தயார்செய்த படியே அனுப்புகிறதென்று தீர்மானமானது.

2-வது மகாஜன சங்கம் பிரசார வேலைக்கும், பணவசூலுக்குமாக கனம், பி. பழனிவேல் நாடார் பி. ஏ. அவர்களை மானேஜராக நியமனம்செய்து, சங்கம் ஆபீசுக்கு ஓர் கட்டடம் வாடகைக்கு அமர்த்துகிறதென்று தீர்மானமானது

கனம் பி. பழனிவேல் நாடாரவர்கள் பி ஏ. இவர்கள் மதுரையில் சௌராஷ்டிர ஸ்கூலில் உபாத்தியாயராக யிருந்து, சமீபத்தில் வக்கீலாக வந்தார்கள். மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான வருமானம்பெற்று வந்தார்கள். நமது நாடார் மகாஜனங்களின் முன்னேற்றத்தைக் கருதி சங்கமானேஜ ராவதற்கும், மாதம் 50-ரூபாய் சம்பளத்துக்கும் இசைந்ததற்கு நாடார் ஜனங்கள் அனைவரும் அவர்களுக்கு நன்றிசெலுத்த வேண்டும். அவர்கள் சம்பளத்தையே கருதவில்லை. தன்னுடைய செலவுக்கு மட்டும் கட்டினாலும் போதுமென்பதே அவர்களுடைய உள்ளக் கருத்து. இந்த நோக்கில் இப்படிப்பட்ட ஒரு புருஷசிங்கம் கிடைத்தது கடவுளுடைய அனுக்கிரகமென்றே நம்புகின்றோம்.



மேல்படியார் சாத்மீகக் குணமும் அமைதியான தோற்றமும் உடையவர். இவரால் இக்காலத்தில் அடைபட்டுக் கிடக்கும் நாடார்கள் சக்தி, பிரகாசித்து தேசத்திற்கே அதிக நன்மையுண்டாகக்கூடும். கூடிய சீக்கிரம் வெளியூர்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்வார். ஆங்காங்கு நல்வரவேற் றுபசரித்து நாடார்களுடைய விருப்பங்களையும், தெரியப்படுத்திக் கொள்வதோடு அவர்கள் கோரிவரும் காரியத்தையும் பூர்த்திசெய்து வைக்கவேண்டும். நமது நாடார்ஜன சமூக முன்னேற்றத்தைக் கருதி மேற்கண்ட அபிமான புருஷோத்தமரைப்போல் இன்னும் சில பேர்களாவது தலைகாட்டுவார்களானால் கூடிய சீக்கிரம் நாடார் ஜனசமூகம் வெகுவேகமாய் முன்னேறி உலகத்துக்கோர் திலகமாய் விளங்கி தேசஞ்சுகமாய் வாழுமென்பதற் கையமுளதோ?

☞ நாடார் மகாஜனசங்கம் ஆபீஸ், மதுரை தளவாய் அக்கிராரம், 1034, நெம்பர். மாளிகையின் மேல்மாடியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

பத்திராதிபர்.

---

## திருநல்லூர் குருபூஜை திருவிழா.

ஆறாரிற் சிறந்த பேரூர்த்திலகும் நமது நல்லூரருப்புக் கோட்டையில் திருக்கோயில் கொண்டருளிய ஸ்ரீமத் ஏனதிநாத நாயனார் அவர்களின், 18-வது வருடத்திய குருபூஜைத் திருவிழா சித்தார்த்தி வருடம் புரட்டாசிமாதம் 17-ந்தேதி பகல் 10-மணிக்கு சிங்காரத் தோப்பில் மங்களகரமாய் நடைபெற்றது. சுமார் 5000 ஜனங்களுக்கு அறுசுவையுடன் அன்னமளித்தக் காக்ஷி வெகு மாக்ஷியாயிருந்தது. மறுதினம் திருமடாலயத்தின் சிங்காரக் கொட்டகையில், கோயில்பட்டி ஸ்ரீமான் கணபதி நாயுடவர்களால் நாயனார் சரித்திரமும், நந்தனார் சரித்திரமும் காலக்ஷேபம் நடந்தேறியது. எல்லாம் வல்ல இறைவனருளால் பிரதி வருடமும் இத் திருவிழாவைபவம் சிறப்புற்றோங்கக் கோருகின்றோம்.

கண்டு களித்தோன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



## நாடார் மஹாஜனங்களுக்குரிய சில குறிப்புகள்.

அன்புமிக்க பெரியோர்களே, கனவான்களே, சகோதரர்களே, மேற்கண்ட தலைப் பெயருடன் சிலவிஷயங்களை, தொடர்ச்சியாய் எழுதிவர வேண்டுமென்ற ஆசையுள்ளவனும், முன் வந்திருக்கும் எனது அறியாமை நிரம்பிய வாசகங்கள், தங்களுக்கு ஞாயமாகவே தோன்றினும் அவைகளில் உங்கள் கருத்திலுள்ள மேலான நோக்க முடைய நற்கருமங்களுக்கு, அநுசரணையா யுள்ளவைகளை மாத்தி ரம், அன்னப்புள்ளானது பாலும் நீரும் கலந்து வைத்தாலும் தனக்குரிய பாலைமாத்திரம் கிரஹித்துக்கொண்டு, நீரை எவ்விதம் தள்ளிவிடுகிறதோ அதுபோலவே தாங்களும் குற்றங்களை நீக்கி, குணத்தைக் கிரஹித்துக் கொள்ளும்படித் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1. திருமகள் குலவுந் தென்னிந்தியாவில், மருமலர் நிறைந்த வாவிகள் சூழும், பாண்டிய நாட்டின் பண்பும் உரிமையும், வேண்டிய வேண்டியாங் கெய்தப்பெற்று தமிழ் மடமாது தழைத்திடுதற்காய், அமிழ்தினுமினிய தமிழவை நிறுவிய அண்ணல் பாண்டிய அரசர்தங் குலத்துத், தண்ணளிவழங்குஞ் சான்றோரினத்துளீர்!

நமது இந்தியா தேசமும், இதர ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், முதலான தேசங்களும், தங்கள் தங்கள் தேசமும் ஜாதியும், முன்னேற்ற மடைவதற்காகவும், கல்வி, ஒழுக்கம், நாகரீகம், செல்வம், கைத்தொழில் வியாபாரம், விவசாயம், ராஜரீகம், முதலிய விஷயங்களில் தாங்களே சிறந்தவர்களென்று உலகத்தாருக்கு நிரூபிக்கச் செய்துவரும் முயற்சிகள் பத்திரிகை மூலமாயும், பிரசங்கங்கள் மூலமாயும் நமது செவிகளில் கணீர், கணீர், என்று ஓசைபெறச் செய்வதையும், இதர ஜாதியார்கள் முன்னேற்ற மடையச்செய்யும் முயற்சிகளைப் பார்த்தும் கேட்டும், நம்முடைய ஜாதியார்கள் மாத்திரம் இன்னும் தங்கள் நித்திரை சரியாய்த் தெளிவடையாமல், தூங்கிக் கிடப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமன்றோ!



## சந்திரகுல க்ஷத்திரிய மகாஜனங்களே!

உலகத்திலே அறிவு விளங்கும் ஞாயிறு உதயமாகிவிட்டது. அஞ்ஞான இருள் விலகுகிறது மெஞ்ஞானமாகிய சேவல் தங்கள் இரக்கைகளை உதறிக்கொண்டு உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும், புதிய தொனியுடனும் கூவுகின்றது. தேசாபிமானிகளாகிய பக்தர்கள், தெருக்கள்தோறும் தங்கள் பிரசங்கமாகிய வெண்சங்குகளை முழக்குகிறார்கள். விளக்கிருக்கு மிடத்திலே இருளொளிப்பது இயல்பாதலால், பலரும் விழித்துக் கொண்டவுடன் பலயிடங்களி லிருந்தும் விலகுகிற இருள், உங்களிடத்திலே தங்கிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தூக்கம் விடுங்கள் எழுந்திருங்கள் சரியாய் உடுத்திக் கொள்ளுங்கள். உலகத்தார்க் கெல்லாம் ஒரு பந்தயஸ்தலம் குறிக்கப்பட்டிருக்கிறது. சகல தேசத்தாரும், சகல ஜாதியாரும், அந்தஸ்தலத்தை நோக்கிப் பிரயாணஞ்செய்ய ஆரம்பித்து விட்டார்கள். நீங்களும் உங்கள் பிரயாணத்தை சந்தோஷத்தோடும், ஊக்கத்தோடும், விடா முயற்சியோடும், தன்னம்பிக்கையோடும், ஆரம்பஞ் செய்யுங்கள். ஜெயம் பெறுவீர்கள்.

பந்தயஸ்தலம் எதுவென்பீர்களோ, சத்தியம், அன்பு, ஜீவகாருண்யம், பரோபகாரம், சுயேச்சை, சுதந்தரம், சகோதரத்துவம், தன்னலமறுப்பு, என்பவைகளே.

அவைகளை அடைவதற்குப் பலஹேதுக்க ளுளவாயினும், யாவற்றினுஞ் சிறந்து ஒத்தாசையா யிருப்பது, கல்வியும் ஒழுக்க முமேயன்றி வேறல்ல. முதல் கல்வியைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நமது ஜாதியார்களில் நூற்றுக்கு சுமார் 6-அல்லது 7-பெயர்களே, தேசபாஷையில் பயிற்சி பெற்றவர்களா யிருக்கிறார்கள். அதிலும் ஸ்திரீகளிலோ வென்றால் நூற்றுக்கு ஒருவர் கூடவில்லை, இங்கிலீஷ் படிப்பிலோ நூற்றுக்கு ஒருவரே. இந்த நிலைமையிலிருக்கிற நம்மை முன்னேற்ற மடையும்படி செய்யவே நாடார் மஹாஜன சங்கம், ஏற்பட்டு வேலைசெய்யத் தொடங்கியிருக்கிறது. சுமார் பத்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



என்னும் பொய்யா மொழியை உற்று நோக்கியும். அன்றறிவ மென்று தறஞ்செய்க, மற்றது பொன்றியும் பொன்றுத்துணை— என்ற வேதவாக்கை மதித்தும், நாளைச்செய்வோம், நாளைச்செய் வோம், என்று காலங்கடத்தாமலும், பிறர் கேட்டால் கொடுப்போம் நாமே வலியமுன் வரலாமோ என்று சந்தோஷப் படாமலும், செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல், என்பதை யுணர்ந்து, செய்ய வேண்டிய கடமையை நம்மவர்கள் பொருளுதவிசெய்து நிறை வேற்றுவார்களானால் வெகு சீக்கிரத்தில் முன்னேற்ற மடைந்து விடலாம்.

சமீபத்தில் நமது மஹமதிய சகோதரர்கள் தஞ்சையில் கூடிய "மஜ்லிசுல் உலமா" என்னும் கான்பரன்ஸில் ஏழை மாணவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் செய்த உடனே நம்மவர்களைப் போல் யாராவது சும்மாயிருந்து விட்டார்களா? ஆயி ரக் கணக்கான பணம் குவிந்துவிட்டதன்றோ? மதுரையிலுள்ள சௌராஷ்டிரர்கள் செய்யும் முயற்சியைப் பாருங்கள். எத்தனை பிரை மெரி செகண்டெரிப் பள்ளிக்கூடங்கள் ஹைஸ்கூல்க ளென்ன ஏழை மாணவர்களுக்கு அன்னமிட்டு ஆதரிப்பவரென்ன? புஸ்தகம் வாங்கிக் கொடுப்பவர்களென்ன? காலேஜில் படிப்பவர்களுக்கு சம் பளப் பணமென்ன? இவைகளை யெல்லாம் நேரில் பார்த்தும் பத்திரிகைகளில் படித்தும், யாதொருவித ஒத்தாசையுஞ் செய்ய மனமில்லாமல், பலவித வேடிக்கைகள் கேளிக்கைகளுக்கும், கோர்ட் டுகளுக்கும், செலவழிப்பதில் பின்வாங்குவ தில்லையென்று பே வாங்குவது தானோ? சான்றோர் குலத்தவர்க்கழகு. தன்குலத் தாருக் குக்கூட ஒத்தாசைசெய்ய முடியாத ஒரு ஜாதியை உலகம் மதிக் குமா? மேன்மக்களென்று சொல்லத்தான் நமக்கு வாயுண்டா? இன் னும் இணற்றுத் தவளைகளைப்போல "வாழ விரும்பினால், உலகத்தில் இழிப்பட்டவர்களினும் இழிப்பட்டவர்களாய் விடுவோம்.

விதியின் எழுமின் கருதிய கருமங் கைகூடும்வரை சலியா துழைமின்? என்ற உபநிஷத் வாக்கியத்தை உற்று நோக்குங்கள். நமது சகோதரர்களாகிய ஏழைகள் கல்வியில்லாமல் எவ்வளவு தூரம் பின் தங்குகிறார்களோ அவ்வளவும் நமது தனவந்தர்களுக் குப் பழிப்பும், சகோதர வாஞ்சையற்ற சுயநலப் பிரியர்களென்னும்



வசைமொழியுங் கிடைப்பதற்கு இலக்காவதுடன் இவர்கள் மதிப் புடன் வீற்றிருக்கும் சபைகளில் இன்னவூரில் இன்னவிதமான, நாகரீகமும் கல்வியுமற்று, இழிதொழில் புரிகிற ஜாதியைச் சேர்ந் தவர்களென்று குறிப்பிடப்படுவதோடு அவர்கள் முன்னேற்றத்துக் குத் தடைக்கல்லாகவு மிருப்பார்கள்.

இவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தாவது, நமது தனவந் தர்கள் ஏழைகளாகிய சகோதர சகோதரிகள் கல்வியில் முன்னேற் றமடைந்து நாகரீகமும் ஒழுக்கமும், உடையவர்களாயிருக்க முயற் சிப்பார்களென்று நம்புகிறேன்.

காலத்தில் செய்தநன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப்பெரிது.

(இன்னும்வரும்)

A. C. பாண்டியன்.

---

நாடார்குல மித்திரன்.

## விஜய பேரிகை.

நீடாழி யுலகத்தில் வாடாத செல்வம் வதித்த, பீடார்மதுரைப் பெருநகர் பாண்டிச் சிரார்பதியில் ஈடாருமிலாத செங்கோல் செலு த்திய, திங்கள்தங் குலத்துத் தங்க க்ஷத்திரியர் பாண்டியர் தங்கள் பாரம்பரையாளர், வேண்டிய செய்யும் விற்பனர் மற்புயர், நாடாக வரைத் தேடா சுபுத்திரர், ஏடார்வரையோர் வீடாறுடையோர், சூடாமணியாய் கோடாதெழுந்த என்னருமை "நாடார்குல மித்திர" நின்பெயர் நீடூழி வாழ்க.

மித்திரா! உன்னை யலங்கரிக்கவும், (வெளிவந்துலவும் செலவுக் குக் கொடுத்துதவவும்) வன்புகழைப் போற்றவும், (உன்னகத்தில் சூடிவரும் சூர்சங்களைப் படித்து மகிழவும்) சொல்லு முறைப்படி அல்வழிநீக்கி, நல்வழி நடக்கவும், நின்ஜனன (வருட மொருமுறை மகாஜன சங்கத்தை வழுவாது நடத்தவும்) மஹோற்சவங் கொண் டாடவும், நினது இளமைப் பருவத்திற் கேற்ற அமுதூட்டி வளர்க்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



கும் அன்னைமார் போன்ற பொன்னைமார்புடைய போஷகர்களு ஆதரணை மெம்பர்களும், நின்னுடன் ஆடிமகிழ சந்தாதாரராகச் சே வதற்கு ஆயிரக் கணக்கான வருமாகி, அன்றிருந்த ஆறுயிர பாண்டிய நாடார்களின் வம்சாதிபதிகள் இன்று ஆறலக்ஷம் பாண் டிய நாடார்குல தனதனவான்கள் உன் வரவை வுற்று நோக்கி யிரு கின்றார்கள். அவர்களில் நானும் ஒருவன் (விஜயமாகிய) தமிழ் (பேரிகையாகிய) வியாச மெழுதிப்படிக்க எழுதுகோலைத்தாங்கி எதிரே நிற்கின்றேன். விஜயஜெய வைபவா. பாண்டிய நாடார்களு கோர் மஹானுபாவா. மித்திரா! வா! நினது விஜயபேரிகை முழங் வெளிவா.

மித்திரா! நினது விஜயம் எங்கட்கு ஜெயம். நினது வருகை எங்கட்குப் பெருமை. நினது வியாசம் எங்கட் கதிரசம். நினது போதம் எங்கட்கு மதுரிதம். நின்மதி எம்மனோர்க்கு நன்மதி. நின் செயல் எமக்கோர் நெல்வயல் நின்னருள் நாடார்களுக்கோர் நற்பொ ருள். நின்வாக்கு என்னினத்தோர்க்கு இன்ப ரசப்பாக்கு. ஆதலின் நாடார்குல மித்திரா! நாகரீக சோத்ரா! நல்லூர் முத்து நாடன் நற்றவம்பெற்ற சுபுத்ரா! வா! நினது விஜய பேரிகை முழங் வெளிவா.

மித்திரா! வெகுகாலமாக நினது விஜயத்தை நோக்கிப் பேரிகை யடிக்கக் காத்திருந்து நின் வரவை கவனித்துப், பேரிகை யடிக்கு எனக்கோ ருபகாரம் செய்வது நின்கடனாகலின், அடியிற்கா ணு விஜய பேரிகையின் வியாச வாக்கியத்தை நின்னகத்தில் கு என்னகக் குழாங்களாகிய சங்கத்தினருக்குத் தெரிவிப்பாயாக.

மித்திரா! கருணைபொருந்திய நமது பிரிட்டிஷ் கவர்ன்மெண் டாரின் ஆதிக்குள்ளடங்கிய நமது இந்தியாவில் வசிக்கும் மு பதுகோடி ஜனங்களுக்குள் நம்மினத்தவர் ஆறலக்ஷக் கணக்கி இருக்கின்றனர். (பெருபெத்ததி தாகானிகி நேனேலேது) என்று ஒ வர் சொன்ன பழமொழிப்படி நாமும் இருக்கின்றோம் என்பதா ற்று. காரணம் பிரபல வர்த்தகர்களும் கனதன[illegible]களும் நிலவா மிருக்க விவசாயிகளுமாக அநேக ரிருக்கின்றார்கள். இருந்தாலு (தமிழ் இங்கிலீஷ்) என்னும், சுயபாஷை ராஜபாஷை யறிந்தவர்க



சொற்பத்திலும் சொற்பமென்னலாம். ஆடவர்களில் அப்படியிருந்தால் பெண்களில் படித்தவர்கள் என்னும் பேச்சேது.

ஏதோ நற்கால பலத்தினால் இரண்டொரு பிள்ளைகள் சொற்ப படிப்பு (மெட்ரிகுலேஷன் அல்லது எப். ஏ.) படித்திருக்கினும் அதை பரிமளத்திற்குக் (உத்தியோகத்திற்குக்) கொண்டு வாராமல் கரிமயமாக்கி விடுகின்றார்கள். இதனால் இவர்கள் நூற்றுக் கணக்காய் செலவு செய்து வாசித்தும் பிரயோசன மில்லாமற் போகின்றது. படித்தது சொற்பமாயினும் அதற்கடுத்த உத்தியோக ஸ்தானத்தை வகிப்பார்களானால் நம்மவர்க்கு அதனிமித்தம் எவ்வித பெருமை வரக்கூடும் என்பதை மறந்து விடுகின்றனர். இதனால் சமயம் வாய்த்தபோது இரண்டொரு கோண எழுத்தைப்படித்து மாதம் 10-ரூபாய் சம்பளம்பெறும் ஓரன்னிய உத்தியோகஸ்தனிடம் காரியத்தை முன்னிட்டு கைப்பொருளையுங் கொடுத்து காலில்விழுந்து பல்லைக் காட்டவேண்டியதா யிருக்கிறது. நம்மவரில் வாசித்த பிள்ளைகள் நாலுபேர் நாலு டிபார்ட்மெண்ட்களில் உத்தியோகத்திலிருந்தால் நமக்கெவ்வித அநுகூலமா யிருக்கும்.

நிற்க, ஆடவர்கள்தான் இப்படி பெண்களையாவது படிக்க வைக்கின்றார்களா? அதுவுமில்லை அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பேதற்கு என்று அதிகப் பிரசங்கம் செய்யும் புராதனப் புலவர் சிகாமணிகள் வெகு பேர் இந்த நவீன காலத்திலு மிருக்கின்றார்கள். இவ்விதம் நம்மவர் எண்ணிபடங்குவதாலன்றோ அன்னியர் பலர் பலவிதம் எண்ணுகின்றனர். அதிகமாய்ச் சொல்வானேன். சமீப சம்பவத்தைக் கவனிப்போம். அதாவது, நமது ராஜப் பிரதிநிதியாகிய, ஸ்ரீலஸ்ரீ, லார்டு ஜேம்ஸ் போர்டு, அவர்கள் சென்னைக்கு விஜயமாகும் சமயம் நம்மவர்கள் குறைகளை முறையிடக்கூடிய அப்ளிகேஷனுக்கு ஆர்டர் கிடைக்காத காரணத்தை உத்தேசித்து பலர் பலவிதமாகப் பத்திரிகைகளில் எழுதுகின்றனர் சிலர் அடிக்கின்றனர். சிலர் யோசிக்கின்றனர். கருணைபொருந்திய கவர்ன்மெண்டுக்கு நாம் என்ன குற்றம் செய்தோம், எதற்காக நமக்கு உத்திரவு கிடைக்கவில்லை என்று சிலர் பெருமூச்சு விடுகின்றனர் நாமென்ன செய்தும் நமக்கு ஆர்டர் கிடைக்காத காரணம், ராஜ பாஷையில் நம்மவர்கள் அதிகமாய்த் தேர்ச்சிபெற்று பல டிபார்ட்மெண்டுகளிலும் உத்தியோகத்திலில்லாத குறையே இதற்கு உதாரணமென்று திட்டமாய்ச் சொல்லுவேன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



இதென்ன விபரீதம், நம்மவர்கள் பெரிய பெரிய ஸ்கூல்கள் இலவசமாக வைத்திருக்கின்றார்கள். அநேகர் பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றிருக்கின்றார்கள். சிலர் வக்கீல்களாக யிருக்கின்றார்கள். இன்னுஞ் சிலர் சில உத்தியோகத்தி லிருக்கின்றார்கள். அப்படியிருக்க இப்படித் தப்பிதம் புகல்வானேன் என்று சிலர் எண்ணிச் சினங்கொள்ளக்கூடும். அங்ஙன மிருப்பதும் தற்போது நன்குலச் சிறமியர் வாசிப்பதும், பெண்களுக்காகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதும் உண்மைதான். இருந்தாலும், நமது ஜனத்தொகைக்கு இது கடுகளவுதான். எப்படியென்றால், லக்ஷக்கணக்கான நம் நாடார் ஜனங்களில் ஆங்கிலப் பத்திரிகை வாசிப்பவர்கள் 50-பேரிருக்க மாட்டார்களென்றே சொல்லலாம்.

தினசரி ஆங்கிலத் தமிழ்ப் பத்திரிகைகளை வாசித்துப் பலதேச வர்த்தமானங்களைத் தெரிந்து பலவித உத்தியோக ஸ்தானத்திலிருந்திருப்போமாகில், நமது அப்ளிகேஷனை கவர்னர் செகிரிடெரியவர்கள் தடுக்க முன்வருவாரா? நமது குறைகளுக்காக முறையிடுங் கூச்சல் தமிழ்ப் பத்திரிகைகளில் தானே? எந்த ஆங்கிலப் பத்திரிகையில் நம்மவரெழுதும் வியாசங்கள் அடிக்கடி வெளிவருகின்றது? எந்த டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர் நமக்காக பரிந்து முன்வந்து நின்று பேசுகின்றார்? மற்ற நமது இந்திய சகோதரர்களுக்கு நல்ல உத்தியோக ஸ்தானமும் நன்மதிப்புங் கிடைக்குங் காரண மென்ன? ஆங்கிலப் படிப்பின் ஆக்ஷியும் உத்தியோக ஸ்தானத்தின் மாக்ஷியுமல்லவா?

இதுபோல் நம்மவர்களிலும் சிலர் நன்கு வாசித்து நானாவித பத்திரிகைகட்கும் வியாச நேசராய்நின்று, தோட்டி முதல் தொண்டைமான் வரையிள்ள கவர்ன்மெண்ட் உத்தியோக ஸ்தானங்களில் இருப்பார்களாகில் அதனால் கிடைக்கும் ஆனந்த சந்தோஷத்திற்கு அளவுண்டா? இதை விட்டு அந்த சபையில் மெம்பர்ஸ்தானம் வேண்டும். இந்த சபையில் உம்பர்ஸ்தானம் வேண்டும் என்றால், எங்கிருந்து கிடைக்கும். அடெண்டர் என்று சொல்லப்படும் சிறிய உத்தியோக ஸ்தானத்திலிருந்து, கிளர்க், ஹெட்கிளர்க், மானேஜர், போர்மேன், காஷியர், ஸ்டோர்கீபர், முதலாய்ச்சொல்லும், கவர்ன்மெண்ட் இலாகா பலடிபார்ட் மெண்ட்களிலும், பல வுத்தியோக



ஸ்தானத்தை வகித்தாலன்றோ, சபைகளில் மெம்பர்ஸ்தானங்கள் ஏற்படும் என் மித்திரா! தெரிந்தோ தெரியாமலோ ஆசைமேலீட்டால் எழுதிய நினது "விஜய பேரிகை" வியாசத்தில் குற்றமிருக்கினுங் குறைகூறாது, உற்று நோக்கக் கற்றவர்க்கென் வந்தனோபசாரம் சொல்லி நம்மனோரை நாகரீக நவீனானந்தத்தை நாடும்படிக்கும், ஆங்கிலத்தில் நற்பாண்டித்தியம் பெற்று நானாவித உத்தியோக ஸ்தானம் வகித்து அதனாலேற்படும் நற்பேரை நமது நாடார் மகாஜன சமுகத்திற்குத் தரும்படிக்கும் நற்புத்திப் புகட்டிவா. நானும் நினது விஜய பேரிகையைத் தாங்கி ஓங்கியடித்து வோசைகாட்டி நம்குல நண்பர்களின் நித்திரையை நீக்கி நின்வரவைத் தெரிவித்து எதிருறச் செய்கின்றேன். அடுத்த முறை சந்திப்போம். ஜெயம். ஜெயவிஜயவைபவம் நாடார்குல மித்திரன் விஜய பேரிகை வியாசப் பிரதாபம். சுபம்!

ச. சு. சங்கரலிங்க நாடார்.

---

## மனானந்த மஞ்சரி.

அப்பனிறந் தண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உரிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை யிவை.

என்று ஓர் புலவர் பெருமானியம்பலும், மயிலூர்தி மனஞ்சலித்துவிடந்தாங்கியிடஞ் சென்று தந்தாய்! இனி நீர் ஐயமெடுப்பீரேல், நானும் மடியிற் குதித்துலவேன். கைநீட்டிப் பிச்சை எடாதிருக்க காணோர் தந்திரஞ் சொல்கிறே னென்று செவியிற் சில மந்திரம் புகல எந்தை சந்தோஷித்துக் கைநீட்டி ஐயமெடுக்கவில்லை என்று கால் தூக்கியாடி காசுபறிக்கத் தலைபிட்டனர். கண்ட கடம்பன் எண்டிசையுமீன்ற ஒண்டொடி பாலனுகி, ஏ! அம்மே! இடுகாட்டி லலைவதாலன்றோ நின்னைப் படுநீலி என்கின்றனர். ஆங்கணுகுலைவயேல் என்னைத் தாங்கி யமுதங் கொடுக்கத் தகாதென்ற குகன் மொழிகேட்ட ஜெகதாம்பிகை வெகு நலமென்று, சிரமாலை பூண்டனளாம். நன்று நன்று, என் தாய்தந்தையின் விந்தையென்று, கந்தன் கணபதி

முன்னின்று, அண்ணே! பெருந்தீனி தின்று வயிற்றைப் பெருக்க வைத்துக் கொண்டாம். சிறுதீனி தின்று தொந்தியை சிறுகச் செய்து கொள்ளென்றான். உத்தமம் என்று அத்திமுகன் எலியைச் சினேகித்து இருண்ட நேரத்தில் வீடுகளிற் புகுந்து அடுகலமுருட்ட ஆரம்பித்தனர். காட்டாண்டி மகன் வீட்டாண்டி என்று நினைத்துக் கடுஞ்சினத்துடன் கண்ணன் வசமுற்று, அம்மானே! உறிதிருடி பிழைப்ப துனக்கழகா? நின்னால் என்னை யேசுகின்றனரே, விட்டுவிடு மவ்வேலையை என்ற மருகன் வார்த்தைக் கிணங்கிய மாமன், இனி திருடேன் என்று பாரதத்தை ஆரம்பித்தனராம். இங்ஙனமிவர்கள் செயலைக்கண்ட செந்திலோன். சீ! சீ! இவருறவு கூடாதென்று குறவர் வீட்டிற் குடி புகுந்தனராம். அப்பெருமான் திருவருள் எப்போது நம்மை யாளட்டும்.

மன்னவா! நின்னருங் குமாரரிருவரில், ஒருவன் இருபெண் அதிலுங் குறப்பெண்ணைக் கொண்டான். ஒருவன் தாய்போல் தாரம் தேடி சந்திமுனையில் குந்திவிட்டான். "என்னே நீர் பெற்ற பிள்ளைகள் பெருமை. என்ற தேவியின் திருவாக்கை செவியுற்ற தில்லையாடி, இடைச்சி பெற்ற பிள்ளைகள் மடத்தனஞ் செய்துவிட்டார்கள். இதற்கென் செய்யலாமென்னலும், காதலா! அவ்விடைச்சி யாரோ? அறியுமென்ற அம்பிகையை நோக்கி அவள்தான் இவளெனத் தூக்கித் துடைமீ திருத்தினராம். இச்சதிபதிகளின் திருவிளையாடல் நமதருகிருந்து காத்து ரக்ஷிக்கட்டும்.

கண்ணாளா! முற்போரொரு சமயம் என் அண்ணனைத் தாங்கள் தூக்கிச் சுமந்தீராமே? அவரதற்குக் கொடுத்த உபகாரப் பணமெங்கே என்று வினவிய என்னம்மையின் செம்மைசேர் முகத்தைப் பெம்மான் பார்த்து, பெண்கட்கமுதே! அந்தப் பணம் எங்கள் திருவடிக்கீழ் இருக்கிறதே நீ காணவில்லைபோலும் என்றியம்பினர். சுவாமி! தம் திருவடிக்கீழிருப்பது நம்மைத் தாங்கும் எருதன்றோ என்றனள் ஆம். ஆம். அஞ்சுகமே! அந்த எருதே உந்தனுடன் பிறந்தோன் என்னலும், எங் தாய் தலைகுனிந்தனள். காதலி! ஏனோ இந்த வெட்கம் என்று முத்திருடு முகமன்கூற முகமலர்ந்த ஜகன்மோகன உமாபதியின் திருவடிக் கமலங்கள் நமது திருமுடி மீதிருக்கட்டும்,

நல்லூர் நண்பன்.



## சென்னை செய்தி.

### நாடார்களும் மகமை வசூலும்.

என்னகரினும் நன்னகரெனப் புகலும் சென்னைமாநகரில் சுமார் 500, தலைக்கட்டுகள் கொண்ட நாடார் குலத்தினர் வசிக்கின்றனர். இந்த 500, வீட்டுக்காரர்களும் தென்தேசத்தின் பல ஊர்களிலிருந்தும் இங்கு குடியேற்ற மானவர்கள். நாடார்கள் சென்னையிற் குடிபுகுந்து சுமார் 100, வருடத்திற்கு மேற்கொண்டிருக்கலாம். பிரபல வர்த்தகர்களும் தனதனவந்தரும் நன்குவாசித்த நாகரீக நவீன நடையுடையாளரும் சைவ நெறியுந் தயாள சிந்தையு முடையவர்களாகவே யிருக்கின்றார்கள். இங்ஙனமிருக்கும் இவர்கள் இந்நகரிற் குடிபுகுந்து நூறு வருடத்திற்கு மேலிருக்கினும், இவர்களின் சுதேச வழக்கப் பழக்கமாகிய மகமை என்னும் மகிமையைக் கைக்கொள்ளாது தத்தமக் கியன்றபடி உறவின் முறையுடன் நடந்து வந்தனர். நாகரீகமும் நவீனத் தோற்றமும் நாஜுகிசையும் நடனமாடும் சென்னைமா நகரில் இதுநாள்வரை இவ்விதமிவர்கள் வாழ்நாள் கழித்தல் ஆச்சரியமே.

தென்தேச க்ஷத்திரியகுல நாடார்களாகிய சென்னை வாசிகள் தென்தேச முறையைச் சென்ற வருடத்தில் கண்திறந்து பார்த்து, உறவின் முறையைக்கூட்டி "மகமை" வசூலிக்க வேண்டிய விதிகளைப் பேசி ஒற்றுமையுடன் தீர்மானித்து, சென்னை க்ஷத்திரிய குல பாண்டிய நாடார்கள் ஐக்கிய சங்கம் ஸ்தாபித்தனர். அதுமுதல் அடிக்கடி சங்கமீட்டிங்குகள் கூடி முன்னேற்றமாகும் வழிகளுக்குரிய முயற்சி செய்துவந்தார்கள். ஜனங்களும் சந்தோஷமாகவே மகமை கொடுத்து வந்தார்கள். ஆனால் இரண்டொரு வருடம் அடிக்கடி மீட்டிங்குகள் கூடிப்பேசி ஜனேற்சாக முண்டாக்கி நிலுவையில்லாமல் மகமையை வசூலித்து வரவு செலவுகளைப் பிரஜைகளுக்குக் காட்டி இருப்பில் இருக்கும் தொகைக் கணக்கையும் தெரிவித்து, மென்மேலும் ஊராரை ஒற்றுமை யூக்கமடையச் செய்துபின் இதரகாரியங்களில் பிரவேசிக்காமல், தலைவர்களா யுள்ளவர்கள் தளர்ந்த யோசனை கொண்டு சொற்பத்தொகை யிருந்ததையும் மேலும் மேலும் மகமை வசூலால் தொகைசேரு மென்பதையும் உத்தேசித்து அவசரமாக ஆண் பெண் பாடசாலையை ஆரம்பித்தார்கள். இது

நன்மையே தவிர தீமையல்ல, மாதம் ஒன்றுக்கு 25-ரூபாய் வீதம் வாடகை வீடமர்த்திப் பள்ளிக்கூடம் ஆரம்பித்த சில நாளில் ஸ்கூல் சொந்தக் கட்டிடம் ஆரம்பித்தார்கள். ஆரம்பித்த கட்டிடச் செலவு மேலும் மேலும் அதிகரிக்கின்றதே தவிர வேலை பூர்த்தியாய் முடிந்தபாடில்லை. சகல சாமானும் விலையேற்றமான சென்னையில் இவர்கள் ஆரம்பித்த கட்டிடம் இதுவரை யேராளமான பணத்தை இழுத்துவிட்டது. மாணவர் வாசிக்கும் கட்டிட வாடகைக் கொடுக்கவும் வாத்திமார் சேவகசிப்பந்திகள் செலவிற்கும் வசூலாகும் மகமை எட்டவில்லை. இதற்கே இப்படி என்றால் சொந்தக் கட்டிடச் செலவிற்கு எந்த மகமையிலிருந்து எடுத்துக் கொடுக்கிறது.

ஆயினும் முன்னின்ற தலைவர்கள் குலாபிவிர்த்திக்காக தேகக் கஷ்டமும் திரவியப் பொருப்பும் எடுத்துக்கொண்டு கட்டிட வேலையைப் பூர்த்திசெய்து, சமீபத்தில், கிரகப்பிரவேசம் செய்யவும் முன்வந்து விட்டார்கள், பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்களின் ஐக்கிய சங்கத்தின் ஸ்கூல் திறப்புக் கொண்டாட்டம் சிறப்பாய் நடக்க எல்லாம்வல்ல இறைவனருளைப் பிரார்த்திக்கின்றேன். நிற்க சின்னாளாய் மகமை சரியானபடி வசூலாவதில்லை யென்றும், சில கனதனவான்கள் மகமைக்கு நேரான செய்கையை நிரூபிக்கிறார்களென்றும் வதந்தி யுலாவுகின்றது. ஒருவர் ஏதோ, காரணத்தைக் கருதி மகமை கொடாமல் நிறுத்தினால் அவரைச் சேர்ந்த பந்துக்கள் பத்துவீட்டுக் காரரும் மகமை கொடுப்பதில்லையாம். சிலர் அவருக்கு மகமை சொற்பம். எனக்கு மகமை அதிகம் என்று புகார் பேசுகின்றார்கள். இவ் ஆழல்களைக் கேட்ட நமது தென்தேச நண்பரொருவர் "சங்கத்தின் தலைவர்கள் சரியானபடி கவனிப்பதில்லையோ?" என்று நம்மைக் கேள்வி கேழ்கிறார்.

சென்னை வாசிகளாகிய என்குல திலகர்களே! நமது தாய் தந்தையர்களும் மற்ற பந்துக்களும், தாவரசங்கம சொத்துக்களும் இருக்கும் தென்தேசமாகிய நமது சுதேச சகோதரர்களாகிய நாடார்கள் ஒவ்வொரு வூரிலும் மகமை வசூலித்து நடத்திவரும் கீர்த்தியையும் தற்சமயம் அவர்கள் செய்துவரும் முயற்சியையும் மனப்பூர்த்தியாய் எண்ணிப் பாருங்கள். நமக்குள் எவ்வித வித்தியாச மேற்படினும் சங்க மீட்டிங்கு காலங்களில் பலபேர் முன்னிலை



யிற்பேசி விவகாரப்படி வித்தியாசப்பேயை யோட்டிவிடலாம். ஆனால் மகமை என்னும் மகிமையை மாத்திரம் தவராமல் செலுத்திவருவதே சாலச்சிறந்தது. நாம் கொடுக்கும் மகமையை முன்னிட்டல்லவா நமது பிள்ளைகள் வாசிக்க ஸ்கூல் ஆரம்பித் திருக்கிறது. இதை எண்ணாது மகமையைத் தகரால் செய்வோமாகில் ஸ்கூல் "எங்ஙனம் நடைபெறும்? நாமும் நம் சந்ததியாரும் முன்னேற்றமாவதெப்படி? அன்றியும் பிரகாசம் பொருந்திய சென்னை வாசிகளாகிய நாம் இப்படியிருந்தால் நமது சகோதரர்களாகிய, தென்தேச வாசிகள் நம்மை எவ்வித மதிப்பார்கள். அன்னியருக்குத் தான் நம்மீது என்ன பெருமை யிருக்கும். உன்னிப்பாருங்கள்.

பாண்டிய வம்சாதிபதிகளே! சென்னையில் வாழும் என்குல திதிகளோ! தற்கால மேம்பாட்டை எண்ணுங்கள். இதுவே நல்ல சமயம். இச்சமயம் நீங்கள் ஒற்றுமையாகிய, தங்கத்தை யிழைப்பீரேல் முன்னிலும் கஷ்டமதிகரிக்கும் தென்தேச மெங்கும் நமது மகாஜனசங்கம் நிலவிவருகின்றது. அதற்காக கிளைச் சங்கங்கள் தழைத்தோங்கி நிற்கின்றன. இன்னேரம் சென்னை வாசிகளாகிய நாம் மகமைக் கொடாமல் வல்லிடி வழக்குப்பேசி எடுத்த காரியத்தைக் கெடுத்து விடுவோமாகில், அடுத்தவர் மதியார்கள். இதுவரையிலும் நாம் கும்பகர்ணனுடன் கூடிப்பழகியது போதுமானது.

நாடார்குல கனவான்களே? சென்னையில் வசிக்கும் என்னினவான்களே! இனிமேலாகிலும் நமது நித்திரை மயக்கம் தெளிய ஒற்றுமையாகிய அமுதபானம் செய்து, நமது தலைவர்கள் சொல்லுக்கிணங்கி, சரிவர மகமைப் பணங்களைக் கொடுத்து, ஆரம்பித்தஸ்கூலை ரம்பிக்கச் செய்ய முன் வாருங்கள், பிள்ளைகள் இன்பமடைந்களுக்கும் உங்களுடைய காஸ்தா நவீன செலவுக்கும் அபரிமித மில்லாமல் செலவாகும் பணத்தில் அரிக்கா யிருக்காது மாதந்தோறும் நீங்கள் கொடுக்கும் மகமை இதற்குக் குந்தகம் செய்வது சந்திர குலத்துக்குத் தருமமல்ல. தற்சமயம் இங்கு நாம் யேற்படுத்திய மகமையால் மகிமை விளையும் என்பதைத் திண்ணமா யெண்ணுங்கள் நிலுவை மகமையைச் சரிவரக் கொடுத்து சங்கத்தின் அபிவிருத்திக்கும் சந்ததிகள் முன்னேற்றத்திற்கும், ஜாதியின் பிரகாசத்திற்கும் மகமையே காரணம். என்று ஒற்றுமைபெற்று உரிமை பாராட்ட பெருமையடையக் கோருங்கள். அத்துடன் நமது நாடார்குல மித்திரனையும் விருத்தியாக்கும் பொருத்தமுற்று சந்தாநேயர்களாய்ச் சேர்ந்து சென்னையில் வாழும் நம்மவர் கண்ணியத்தை நிலை நிறுத்துங்கள். சகலரும், நமது நாடார் மகாஜன சங்க மெம்பர்களாய்ச் சேருங்கள். சுபம்!

ச. சு. ச. லிங்கம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



## நாடார் மகாஜனக் கிளைச்சங்கம்.

நாளது அக்டோபர்மீ 13-14உ களில் மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா, தேனி கீழ்ப்பேட்டையில் அமைத்த சிங்கா ரக் கொட்டகையில் பட்டிவீரன் பட்டி ஸ்ரீமான், ஊ. பு. அ. மாரி முத்து நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ், வெகு விமரிசையாய் நடைபெற்று இனிது நிறைவேரியது.

முழு விபரமும் இம்முறை யெழுத யிடமில்லை யாகையால் அடுத்த மாதம் வெளிவரு மித்திரனில் விபரமா யெழுதிப் பிர சுரிப்போம். பத்திராதிபர்

## ஓர் மெம்பர்ஸ்தானம்.

கமுதியில் பிரபல வர்த்தகரும், நமது நாடார் மஹாஜன சங்கத்தின் காரியதரிசியுமான கனம் பொன்னுசாமி நாடாரவர்கள் தகப்பனுர் கனம் மாயக்காளை நாடாரவர்களை ராமநாதபுரம் ஜில்லா தாலுகா போர்டு மெம்பராக கவர்ன்மெண்டார் தெரிந்தெடுத் திருக் கின்றார்கள்.

## ஒரு படுகொலை.

15-10-19. புதன்கிழமை யிரவு ஜமீன்தார்களின் பிள்ளைகளுக் காக சென்னையில் தனியா யேற்பட்டுள்ள நியூஇங்டன் காலேஜின் தலைவராகிய மிஸ்டர் டிலாஹே. துரையவர்களை, கடம்பூர் ஜமீன் தாரியான மைனர் சிவசுப்ரமண்ய பாண்டியத் தலைவன் கட்டுக் கொன்றதாகவும், சிங்கம்பட்டி ஜமீன்தாரியான மைனர் சங்கர தீர்த்தபதி இக்கொலைக்கு உடந்தையா யிருந்ததாகவும், போலீசாரால் கைது செய்யப்பட்டனர். கேஸ் விசாரணையி லிருக் கின்றது. காரணம்யாதோ?

## மகாத்மா காந்தி.

காருண்ய வள்ளலாகிய மகாத்மா காந்தியவர்கள், பஞ்சாப், டில்லி, முதலிய இடங்களில் பிரவேசிக்கக் கூடாதென்ற, அரசாங் கத்தின் ஆர்டரானது நீக்கப்பட்டு விட்டதாம்.

## பெண் விற்பனை.

கத்தியவார் ஜில்லா பட்டியர் ஜாதி மாதொருத்தி தன் பிதா வால், 30000, ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்டனளாம். பெண் ணைப் பிறந்தும் பிரயோசனமாகும்படி பெற்றோருக்கு பொருள் தேடிக்கொடுத்த புண்ணியப் பெண்மணி யன்றோ பிள்ளையிற் சிறந் தவள்.

## முன்சிபல் கௌன்சிலர்.

6-9-19-ல் கரூர் ஸ்ரீமான், மு. ஆறுமுக நாடார் அவர்களை ஷெ யூர் முனிசிபல் கௌன்சிலராக பொது ஜனங்கள் தெரிந்தெடுத்திருக் கின்றனர்.



## விடுகதை விஞ விடை.

நமது மித்திரன் முதற் சஞ்சிகையில் ஸ்ரீமான் ச. க. சங்கா லிங்க நாடாரவர்கள் கேட்டிருந்த ஆறு எழுத்துக் கொண்ட ஊர் "காஞ்சீவரம்"

| | | | |
|---|---|---|---|
| 1-3 | எழுத்துகள் | காசி | தேவாலய ஊர் |
| 3-4-5-6 | ,, | சீவரம் | கிராமத்தின்பேர் |
| 4-5-6 | ,, | வரம் | (சகை) கிருபை |
| 1-5-6 | ,, | காரம் | உரப்பு |
| 5-6 | ,, | ரம் | ஐரோப்பியமது |
| 3-4-6 | ,, | சீவம் | பிராணன் |
| 1-3-6 | ,, | காசிம் | முகம்மதியர் பெயர். |

ஜி. கலியாண சுந்தர நாடார்.

☞ குறிப்பு:—மேல் எழுதிய விடையின்படியே 1. R. மீனாக்ஷி, 2. P. பழனிவேலு நாடார், 3. S பெரியகருப்பன், 4. S. ரத்தினம், 5. க. ப. க. முத்துசாமிநாடார், 6. ம. ஞா. ச. வேலுமுத்துப் பிள்ளை, 7. S. சோமசுந்தரம் பிள்ளை, 8. மாணவர் தமிழ் அபிவிருத்தி சங்கம். 9. தெ. கி. கா. பெரியசாமி நாடார், 10. T. M. ரெங்கசாமி பிள்ளை, 11. அ. ச. கந்தசாமி நாடார், 12. சாமிக்கண்ணு நாடார், 13. ஆறுமுகசாமி நாடார். 14. கூ. க. கி. ச. பழனியப்ப நாடார். 15. V. S. ஆனந்த நாடார், 16. ஜேசுவடி யான் நாடார், 17. ஆ. கி. கி. பெ. சுந்தர நாடார், ஆக இப் பதினே ழுபெயரும். எழுதிய விடை பிந்தி கிடைத்ததால், முந்தியவர் கடி தத்தைப் பிரசுரிக்கப்பட்டது. இனும் பெறவேண்டியவரு மிவரே யாவர். பத்திராதிபர்.

---

## விண்ணப்ப வியாசம்.

நாடார்குல அபிமானிகளே!

சென்னை ராஜதானியில், மதுரை, ராமநாதபுரம், திருநெல் வேலி ஜில்லாக்களிலும் மற்றுமுள்ள ஜில்லாக்களிலும் பர்மா, சிலோன் முதலிய இடங்களிலும் நம்மவர்கள் வசிக்கும் ஊர்களில் அங்கங்கு சங்கங்கள் நடைபெறுவதாக அறிகிறோ மாயினும் சங் கங்களின் பெயரும் அதை நடத்தும் பொறுப்பேற்ற உத்தியோகஸ் தர்களின் பெயரும் நம்மிடமில்லை யாகையால் இதைக் கண்ணுறும் நம தபிமானிகள் தங்கள் தங்களுக்குத் தெரிந்த சங்கங்களின் பெய

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



ரையும் முழுமிலா சத்தையும் கூடுமாயின் பொறுப்பேற்ற உத்
யோகஸ்தர்களின் பெயரையும் தயவுசெய்து எழுதவதுடன் நாடா
கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்களின் பெயரும் தலைக்கட்டு
ஜனத்தொகையும் பணக்காரர், முக்கியஸ்தர் படித்தவர் இம் மூவ
களிலொருவர் பெயரையும் தெளிவாயெழுதி யனுப்பவேண்டிய
அக்கிராமங்களின் ஜில்லா தாலுகா போஸ்டு முதலியவைகளு
எழுதும்படிக் கோருகின்றேன். இப்படிக்கு.

குமார்.

நாடார்குல மித்திரன் ஆபீஸ், அருப்புக்கோட்டை.

---

## விநோத விடுகதை வினா.

ஆறெழுத்துக் குள்ளடங்கிய ஊர்ப்பெயர் ஒன்று. அதில் (1-
எழுத்துகள் சேர்ந்தால், பஞ்சலோகங்களின் பெயரையும், (1-5-
எழுத்துகள் சேர்ந்தால் ஒரு பறவையின் பெயரையும், (3-5-
ஒழுத்துகள் சேர்ந்தால், விசனக் குறிப்பையும், (1-2-3) எழுத்துக
சேர்ந்தால், ராஜ சின்னங்களில் ஒன்றையும், (2-3) எழுத்துகள் சே
ந்தால் சாந்திஎன்ற பொருளையும், (4-6) எழுத்துகள் சேர்ந்தா
பூமியின் பெயரையும், (3-2) எழுத்துகள் சேர்ந்தால் மேன்மை எ
பதையும், (1-3) எழுத்துகள் சேர்ந்தால் மும்மூர்த்திகளில் ஒருவ
யும், (3 2) மூன்றாவது எழுத்து முன்னும் இரண்டாவது எழுத்
பின்னுமாகச் சேர்ந்தால் சொர்ணத்தையுங் குறிக்கும். மேற்கண்
ஊரின் பெயரையும் பொருளுக்குச் சரியான அர்த்தமும் சொல்வோ
ருக்கு மோகனதாஸ் காந்தி என்ற புஸ்தகம் ஒன்று இனாமாகக்கொடு
கப்படும். பாண்டியநாடன்.

குறிப்பு:—விடை கூறுவோர் மித்திரன் சந்தாதார
யிருக்கவேண்டும் நமது மித்திரனில் எழுதிவரும் விடுகதை வி
ஒவ்வொன்றுக்கும் தவறாது விடையளிப்போருக்கு வருஷக் கடை
சியில் ஒரு பவுண்டன்பேனா இனாமளிக்கப்படும். ஒவ்வொரு வி
விற்கும் முதலாவது வரும் விடையைத்தான் பிரசுரிப்போம். பிந்தி
யதைக்குறித்துப் பேசுவதில் பலனில்லை. நமது மித்திரனுக்கு அ
மான புருஷர்களா யிருந்து ஆங்காங்கு சந்தா சேர்த்து அனுப்
வோர்களை நமது சங்கத்தில் கவுரவமெம்பர்களாக சேர்த்துக்கொள்
துடன் அவர்களின் பேருர்களை ஆண்டிறுதியில் சுவுரவத்துட
வெளியிடப்படும். பத்திராதிபர்.



## வேணீ விலாசம் என்னும் வேசியர் மோசம்.

(முதலாவது அத்தியாயம் முன் தொடர்ச்சி.)

அப்பா! நீ சொல்வதைக் கவனிக்க வெகு விந்தையா யிரு
கின்றது. உன்தாயுந் தந்தையுஞ் சென்னையில் குடிபுகுந்து எத்தனை
வருடமிருக்கும்? அங்கவர்கள் என்ன வேலைசெய்து ஜீவித்தார்கள்?
சொந்த வூரைவிட்டு அந்நிய தேசத்திற்குச் செல்லவேண்டிய கார
ணம் என்ன? விவரமாக விளம்பக் கோருகின்றேன்.

ஐயா! தங்களுக்கு அநேகங்கோடி நமஸ்காரம் செய்கின்றேன்.
இத்துடன் வார்த்தையை விட்டுவிடுங்கள். மறுபடியும் அவ்விஷயங்
களைக் கேட்டு என் மனதிற்கு விசனத்தை யுண்டாக்கவேண்டாம்.

அப்பா! உலகத்தில் விசார மில்லாதவர் யாரிருக்கின்றனர். விசா
ரமாகிய பேயானது யாரைவிடும். தரித்திரன் முதல் தனவந்தனை
யுள்ளவனுக்கும் விசனப்பேய் பிடித்துத்தானிருக்கும். இதுதெரிந்தே
"அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தால், சொன்ன
விசாரம் தொலையா விசாரநற் றோகையரைப், பன்ன விசாரம் பல
கால் விசாரமிப் பாவிநெஞ்சுக், கென்ன விசாரம் வைத்தாய் இறை
வாகச்சி யேகம்பனே." என்று நமது பட்டினத்தடிகள் பகர்ந்திருக்
கின்றனர். ஆகவே இன்பதுன்பம் என்பதே இல்லறம் என்றாயிற்று.
இதற்காக வருந்தி ஆவதென்ன? வருவதை விதிப்படி அனுபவித்
தாக வேண்டு மல்லவா? விசாரமிட்டால் விதிவிலகி விடுமா? என்
மனம் நின்னைப் பார்த்ததுமுதல் ஒருவித பரவசமுற்று நின் வரலா
ற்றை விசாரிக்க நாடுகின்றது. இதனால் உனக்கேனும் அன்றி எனக்
கேனும் ஒருவித நன்மை கிடைக்கும் என்று நினைக்கின்றேன். ஆத
லின் உன்வரலாற்றை என்னிடம் உள்ளபடி ஒளிக்காது சொல்ல
வேண்டும்.

ஐயா! முதலாவது என் தாய்தந்தையர் விருத்தாந்தத்தை வின
வினீர்கள். இப்போது என் வரலாற்றைக் கேட்கின்றீர்கள் தங்க
ளிஷ்டப்படி எனது கதையை ஆரம்பிப்பேனாகில் முடிவதற்கு வெகு
காலமாகும் தவிரவும் தாங்கள் அதைக்கேட்டு அடையும் பலன்
ஒன்றுமில்லை. இதைவிட பொழுது போக்காக ஏதாவதோர் புஸ்த
கத்தை வாசிப்பது நலமென்று எண்ணுகிறேன்.

அப்பா! நீ சொல்வது நியாயந்தான். இருந்தாலும் மதுரையி
லிருந்து நானுன்னைக் கவனித்து வருகின்றேன். உன் முகக்குறிப்பும்
அடிக்கடி கண்ணீர் வடிக்குங் கலக்கமுங் கண்டு எவ்விதத்தும் உன்
வரலாற்றை விசாரித்துத் தெரிய விரும்பினேன் என்மேலதிக தயவு
செய்து தடையின்றி உனது பூர்வீக விருத்தாந்தத்தை ஒளிக்காமல்
சொல்லவேண்டும்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



ஐயா! தங்களின் பலவந்தத்திற் காகவேண்டி கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன். கவனமாய்க் கேட்டுவாருங்கள்.

எனது தந்தை இராமநாதபுரம் ஜில்லாவில் திருமால்மலை என்னும் ஊரில்பிறந்து வளர்ந்தவர். இவருக்கு முன்னிரண்டு சகோதரருண்டு இவர்கள் எனது பாட்டனாருக்கு முன்தாரத்துப் பிள்ளைகள், பின்தாரத்திற்கு என்பிதாவும் இவருக்கு சகோதரியும் ஆக இரண்டுபேர். என் பாட்டனார் ஓர் பிரபல வியாபாரி. சிவமதம், வெள்ளாளஜாதி, திரண்ட சம்பத்துடையவர். ஸ்ரீ சங்கரேசுரன் என்னும் பேருடையவர். சர்வேசுரன் வரமகிமையால் சந்தோஷத்துடன் சஞ்சலமின்றி வாழ்ந்துவரும் சமயம், தனது பிள்ளைகள் யுக்வயதுக் குவந்தகதிந்து, முன்சாரத் தனயர்களாகிய, ஸ்ரீ நாகேசுரன் ஸ்ரீ நாகலிங்கம், என்னும் இருவருக்கும் அவ்வூரில் தமது சொந்த பந்துக்களில் சிந்தைக்குகந்த சுந்தரிகளைப் பார்த்து விவாகமுடித்து வைத்தார் (விவாகமான இவர்களிருவரும் எனக்குப் பெரிய தந்தைகளாவர்.)

சிலநாள் கழிய இளைய மனைவியின் புத்திரியான ஞானம்பிகையம்மாளுக்கு அவ்வூரிலே தகுந்த வரனைத்தேடி வதுவைசெய்தனர். (இவ்வம்மை எனக்கு மாமியாகவேண்டும்.) சிலநாளில் திருநெல்வேலியில் ஸ்ரீ சுந்தரேஸ்வரி என்னும் பேருடைய என்மாதாவை, என்பிதாவிற்கு மாலையிட்டனர். குடும்பம் முன்னிலுமதிகமாய்ப் பெருத்துவிட்டது. அதற்கேற்றபடி வியாபாரவிருத்தியும் பணப்பெருக்கமும் கிலவளமும் செழித்தோங்கி நின்றது. சிவநேசச் செல்வரான என்பாட்டனார் தனது, மூன்று மருமக்கள் மாரிடமும் மூன்றுபிள்ளைகளிடமும் பாரபக்ஷமில்லாமல் பார்த்து மனநந்தமாய் வாழ்ந்துவந்தார். இவருக்கு இளையதாரமும் என் பிதாவுக்கு தாயாருமாகிய என்பாட்டியாரும் வெகு சுதுகலத்துடன் வசித்து வந்தனள். என்பாட்டியின் பெயர் சங்கரநாராயணியம்மாள்.

அப்பா! எல்லாஞ்சரிதான் உன்பிதாவிற்குப் பெயர்கிடையாதா? உன்பாட்டனார் பெயரிட மறந்துவிட்டாரா? அல்லது நீ என்னிடம் சொல்வதற்கு மறந்துவிட்டனையா?

ஐயா! என்மனவருத்தமானது மறதியை யுண்டாக்கிவிட்டது இனி யவ்விதமின்றிகவனமாய்ச் சொல்லிவருகின்றேன். என்பிதாவின் பெயர் ஸ்ரீசிவ..............................................

மவுனத்துடன் கண்ணீர்விட் டழுகின்றான்.

தமிழ்நாவலன்.

(இன்னும்வரும்)



## சந்தாதாரர் கவனிக்கவேண்டிய விதிகள்.

1. பதில் தெரிய விரும்புவோர் ரிப்ளை எழுதவேண்டும்.

2. சந்தாதாரர்கள் தமது செம்பரைக் குறித்தனுப்புவதுடன் முழு விலாசத்தையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்.

3. இராஜ விரோதம், புறமத தூஷணை முதலிய அனுவசியமான கடிதங்களை அங்கீகரிக்க முடியாது.

4. கடித விஷயதான மெழுதுவோர் பொதுவான வியாசமாகவே எழுத வேண்டும். அனுவசியமான வியாசங்களை பதிப்பிக்க முடியாது.

5. சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் முன்பணமேனும் வி.பி யிலேனும் செலுத்தலாம்.

6. எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச்சேர்ந்தாலும் முந்திய பத்திரிகைகளையும் சேர்த்தனுப்பப்படும்.

7. படிக்கத் தெரியாமலும், வித்தியாசமான பதப்பிரயோகமும், கடிதமிரண்டு பக்கமும் எழுதிவரும் வியாசங்களை கவனிக்க முடியாது.

## சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு தபாற்கூலி யுள்பட வருடமொன்றுக்கு ரூபா 1 8 0

சிங்கப்பூர், செட்டால் முதலிய ஜலப்பிரதேசங்கட்கு தபாற்கூலி உள்பட வருடமொன்றுக்கு ரூபா 2 0 0.

ஆறுமாத சந்தா கிடையாது.

## விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாதம் ஒன்றுக்கு 1-பக்கத்திற்கு ரூபா | 3 | 0 | 0 |
| ,, ,, ½-பக்கத்திற்கு ,, | 2 | 0 | 0 |

நீடித்தகால விளம்பரம் கொடுப்போர்களுக்கு சந்தாதாரனு சாசமாய் சகாயமான சார்சுக்கு விடப்படும் ரிப்ளை எழுதி பதில் தெரியலாம்.

## போஷகர் விவரம்.

மொத்தமாக ரூபா 50 கொடுப்பவர்கள் போஷகர்.

மொத்தமாக ரூபா 25 கொடுப்பவர்கள் ஜீவியசந்தாதாரர்.

போஷகர் வரவு.

பாலக்காடு முனிசிபல் கவுன்சிலர், ஒலவக்கோடு வர்த்தகம், ம-ா-ா-ஸ்ரீ, க. கு. பொன்னப்ப நாடாரவர்கள் வரவு ரூ. 50—0—0

இப்படிக்கு,

கு. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.
நாடார் குல மித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## ராஜ கூந்தல் பரிமளத் தைலம்.

இது மஹா மேன்மையான வாசனையுள்ளது பிரதிதினம் சிரசில் பூசிவந்தால் சதாகாலமும் கூந்தல் பரிமளித்துக்கொண்டேயிருக்கும் தொத்துவியாதிகள் ஒன்றும் கிட்டத்திலணுகா பலகாரணங்களினால் மயிர் உதிர்வதைத் தடுத்து மயிர்கால்களுக்குப் பலத்தைக் கொடுத்து கூந்தல் குதிகாலில் வந்து விழும்படி நீட்டமாய் வளர்த்தி விடுவதன்னியில், தலைமுழுதும் உரோமங்கள் நெருங்கி செழித்து ஓங்கி வளர்வதினால் இரண்டு கைகளினால் கூந்தலை நெருக்கிப் பிடித்தாலும் பிடிக்கடங்காது உலகத்தில் அளவிறந்த பிரயோகங்களிருந்தபோதிலும் இவ்வற்புத குணத் தைலத்திற்கு நிகர் வேறொன்றுமேயில்லை. பரீட்சித்துப்பாருங்கள்.

கிரயம் புட்டி 1க்கு அணா 14   12 புட்டிக்கு கிரயம் ரூபா 10

மாணிக்கராஜ் அண்டு கம்பெனி

72, மணியக்கார சௌள்ட்ரி ரோட்,

இராயபுரம், மதராஸ்.

---

## ரவரத்னம் அச்சுக்கூடம்.

சென்னப்பட்டணம் பழைய வண்ணாரப்பேட்டைக்கு அடுத்த நரசய்யர் தெருவு, 60ம் நெ. ஸ்தாபித்திருக்கும் ரவரத்னம் அச்சுக்கூடத்தில் இங்லீஷ். தமிழ், தெலுங்கு. முதலிய பாஷைகளில் கலியாண கோடீஸ், உண்டியல் பாரம், காஷ்பில், இன்னும் இதரமான ஜாப் வேலைகள், கலர் வேலைகள், பயிண்டிங், ரூலிங், கில்டிங், வேலைகளும் குறித்தகாலம் தவராமல் அச்சிட்டுக் கொடுக்கப்படும். வெளியார் அனுப்பும் ஆர்டர்களை நன்றாகச் செய்து வி. பி. மூல்யமாய் அனுப்பப்படும். தாங்கள் தயவுசெய்து சினேகிதர்களுக்கு சிபார்சு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ம. கோவிந்தராஜுலு செட்டி,

புரப்ரைட்டர்

---

Editor and Publisher S. A. Muthu Nadar, "Nadarkula Mitran" Office, Aruppukota, Printed at the Ravarathnam Press, 60, Narasier Street, Royapuram, Madras.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை